## May 11, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழக முதல்வராக தவெக தலைவர் ச.ஜோசப் விஜய் (51) பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் ஆ.வி.ஆர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். விஜய்யுடன் அவரது கட்சியினர் 9 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

(i) பதவியேற்பு நிகழ்வு முடிந்தவுடன் விழா மேடையிலேயே முதல்வர் விஜய், தவெக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளவற்றில் மூன்று வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் கோப்புகளில் கையொப்பமிட்டார். அதில், இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட் வரை மின்சாரத்தைப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கும் திட்டம், பெண்களின் பாதுகாப்புக்காக சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படையை' உருவாக்கும் திட்டம், போதைப் பொருள் தொடர்பான குற்றங்களைத் தடுக்க மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் 65 போதைப் பொருள்கள் தடுப்புப் படைகளை உருவாக்கும் திட்டம் ஆகியவை அடங்கும்.

(ii) குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், மாநில ஆளுநர்கள் பங்கேற்கும் விழாக்களில் நிகழ்ச்சியின் தொடக்கத்திலும், இறுதியிலும் முதலில் தேசியப் பாடலான வந்தே மாதரம், அதன் பிறகு தேசிய கீதம் பாடப்படுவது மரபு.

- அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும், நிறைவிலும் வந்தே மாதரம் இசைக்கப்பட வேண்டும் என அண்மையில் மத்திய அரசு உத்தரவிட்டிருந்த நிலையில், தமிழகத்தில் புதிதாக அமைந்துள்ள விஜய் தலைமையிலான அரசு பதவியேற்பு விழாவில் முதலில் வந்தே மாதரம் பாடல் பாடப்பட்டது.
- தொடர்ந்து தேசிய கீதமும், கடைசியாக தமிழ்த்தாய் வாழ்த்தும் விழாவின் முடிவிலும் முதலில் வந்தே மாதரம், அடுத்ததாக தேசிய கீதம் பாடப்பட்டது.

2. 17 ஆவது சட்டப்பேரவை திங்கள்கிழமை (மே 11) கூடும் நிலையில், இடைக்கால சட்டப்பேரவைத் தலைவராக சோழவந்தான் (தனி) தொகுதி உறுப்பினர் மு.வீ.கருப்பையா பதவியேற்றார்.

(i) மு.வீ.கருப்பையாவை இடைக்கால சட்டப்பேரவைத் தலைவராக நியமிக்க முதல்வர் விஜய் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, ஆளுநர் மாளிகையில் இடைக்கால சட்டப்பேரவைத் தலைவர் பதவியேற்பு நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை (மே 10) மாலை நடைபெற்றது. இதில், முதல்வர் விஜய், புதிதாகப் பதவியேற்ற அமைச்சர்கள், தலைமைச் செயலர் எம்.சாய்குமார், ஆளுநரின் செயலர் கிர்லோஷ் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

(ii) இடைக்கால பேரவைத் தலைவர் மு.வீ.கருப்பையாவுக்கு ஆளுநர் ஆர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். கடவுள் பெயரால் மு.வீ.கருப்பையா உறுதிமொழி ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து, அவருக்கு ஆளுநர் ஆர்லேகர், முதல்வர் விஜய் ஆகியோர் பூங்கொத்து அளித்து வாழ்த்து தெரிவித்தனர்.

(iii) பொதுவாக மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் மூத்த உறுப்பினர் கட்சி பேதமின்றி, இடைக்கால பேரவைத் தலைவராக நியமனம் செய்யப்படும் மரபு பின்பற்றப்படுகிறது. இடைக்கால பேரவைத் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

3. ஸ்காட்லாந்து நாடாளுமன்ற உறுப்பினராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த க்யூ.மணிவண்ணன் என்ற மூன்றாம் பாலினத்தவர் தேர்வு செய்யப்பட்டார்.

(i) ஸ்காட்டிஷ் கிரீன்ஸ் கட்சி சார்பில் எடின்பர்க் மற்றும் லோத்தியன்ஸ் பிராந்தியத்தில் போட்டியிட்டு அவர் பெற்றார்.

(ii) குறுகிய கால விசாக்கள் (நுழைவு இசைவு) மற்றும் காலவரையின்றி தங்கும் அனுமதி உள்ளவர்கள் ஸ்காட்லாந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான தடை விலக்கப்பட்ட நிலையில், தமிழகத்தில் பிறந்த மணிவண்ணன் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

4. கஜகஸ்தானில் நடைபெற்ற உலகக்கோப்பை ஷாட்கன் போட்டியில் இந்தியாவின் நீரு தண்டா, விவான் கபூர் இணை வெண்கலப் பதக்கம் வென்றது.

(i) டிராப் கலப்பு அணிகள் பிரிவில், நீரு, விவான் கூட்டணி 24 புள்ளிகளுடன் 3-ஆம் இடம் பிடித்தனர். இதில் தங்களுக்கான 30 இலக்குகளில் 24-ஐ அவர்கள் துல்லியமாக சுட்டு வீழ்த்தினர். அதில் விவான் 14, நீரு 10 புள்ளிகள் பெற்றனர்.

(ii) குன் பியாங், வான் யு லியு ஆகியோர் அடங்கிய தைபே அணி 36 புள்ளிகள் பெற்று உலக சாதனையுடன் தங்கம் வென்றது.

5. வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பயணத்தின்போது இந்தியா-டிரினிடாட் டொபேகோ இடையே 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒன்பது நாள் பயணமாக கரீபியன் நாடுகளான ஜமைக்கா, சுரிநாம், டிரினிடாட் டொபேகோவுக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பயணம் மேற்கொண்டார். ஜமைக்கா, சுரிநாமை தொடர்ந்து டிரி னிடாட் டொபேகோவுக்கு அவர் மேற்கொண்ட பயணம் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

- இரண்டு நாள் பயணமாக டிரினிடாட் டொபேகோவுக்கு சென்ற அமைச்சர் ஜெய் சங்கர், அந்நாட்டுப் பிரதமர் கம்லா பெர்சாத் பிசேசரை சந்தித்தார். அப்போது இந்தியா-டிரினிடாட் டொபேகோ இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு நிலவுவது குறித்தும், புதிதாக எந்தெந்த துறைகளில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவது என்பது தொடர்பாகவும் இருவரும் விவாதித்தனர்.
- இருநாடுகளுக்கும் இடையே சுற்றுலாத் துறை, இந்தியாவில் இருந்து அந்நாட்டுக்கு சென்று முதல்முறையாக இந்திய ஒப்பந்தத் தொழிலாளர்கள் தங்கிய நெல்சன் தீவின் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் உள்பட 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- உள்கட்டமைப்பு, பாதுகாப்பு, தடயவியல் துறை, மருத்துவம் உள்ளிட்ட துறைகளிலும், கடந்த 19 மற்றும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தனது காலனி நாடுகளாக இருந்த ஃபிஜி, தென் ஆப்பிரிக்கா, மோரீஷஸ் மற்றும் கரீபியன் தீவுக்கு ஆங்கிலேயர்களால் அனுப்பப்பட்ட இந்திய ஒப்பந்தத் தொழிலாளர் வம்சாவளியினரை கண்டறிவதிலும் இந்தியா-டிரினிடாட் டொபேகோ இடையிலான ஒத்துழைப்பை விரிவுப்படுத்துவது குறித்து இரு தரப்பிலும் விவாதிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. மேற்காசிய பதற்றத்தால் இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு நாளொன்றுக்கு ரூ.1,600 கோடி முதல் ரூ.1,700 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கடந்த 10 வாரங்களில் மட்டும் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் ரூ.1 லட்சம் கோடி இழப்பை சந்தித்துள்ளன.

(i) ஈரான் மற்றும் அமெரிக்கா, இஸ்ரேல் இடையே ஏற்பட்ட மோதலால் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. இதனால் அவ்வழியே கச்சா எண்ணெய் உள்பட எரிபொருள் ஏற்றிச் செல்லும் வணிகக் கப்பல்கள் பயணிப்பது தடைபட்டது. இருப்பினும், இந்தியாவில் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர் ஆகியவை தங்கு தடையின்றி விநியோகிக்கப்பட்டன.

(ii) மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழலால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை பன்மடங்கு அதிகரித்தது. ஆனால் இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்த்தப்பட வில்லை. மாறாக இந்திய எண்ணெய் நிறுவனம், பாரத பெட்ரோலிய நிறுவனம் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனத்துக்கு இழப்பு ஏற்படுவதை தவிர்க்க பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு குறைத்தது.

(iii) இதன் காரணமாக பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றால் ஏற்பட்ட ஒருங்கிணைந்த வருவாய் இழப்பு ஒரு நாளைக்கு ரூ.1,600 கோடி முதல் ரூ.1,700 கோடியாகவும் கடந்த 10 வாரங்களில் ரூ.1 லட்சம் கோடியாகவும் அதிகரித்துள்ளது.

(iv) கடந்த 2 ஆண்டுகளாக இந்தியாவில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.94.77-க்கும் டீசல் ரூ.87.67-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை கடந்த மார்ச் மாதத்தில் ரூ.60 உயர்த்தப்பட்டது.

(v) ஜப்பான், பிரிட்டன் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட நாடுகள் பெட்ரோல் மற்றும் டீசல் விலையை கடந்து 3 மாதங்களில் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

(vi) எனவே இந்தியாவிலும் எண்ணெய் நிறுவனங்கள் கடும் நிதிச் சுமையை எதிர்கொண்டு வருவதால் பெட்ரோல் மற்றும் டீசல் விலையை அதிகரிப்பது தொடர்பாக மத்திய அரசு முடிவெடுக்கலாம் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

7. கடல்சார் உணவு ஏற்றுமதியை அதிகரிக்க சந்தையை திறக்குமாறு ஐரோப்பிய யூனியனுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

(i) இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: இந்திய கடல்சார் உணவுகள் மீது 50 சதவீதம் வரி விதிக்க அமெரிக்கா முடிவெடுத்ததன் விளைவாக மீனவர்களுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதனை ஈடுகட்டும் நோக்கில் உடனடியாக இந்திய கடல்சார் உணவுகளை ஏற்றுமதி செய்ய சந்தையை திறக்குமாறு ஐரோப்பிய யூனியனுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தியது.

(ii) இதன் காரணமாக கடல்சார் உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த சில நிபந்தனைகளை ஐரோப்பிய யூனியன் தளர்த்தியது. வணிகம் செய்ய தடை விதிக்கப்பட்டிருந்த 125 கடல் உணவு நிறுவனங்களின் தரக்கட்டுப்பாடு மற்றும் தர நிர்ணயங்களை இந்தியா மறுசீரமைப்பு செய்தபின் ஐரோப்பிய யூனியன் அனுமதியளித்தது.

(iii) இதனால் சர்வதேச அளவில் கடந்த ஆண்டு ஸ்திரத்தன்மையற்ற சூழல் நிலவியபோதும் கடல் உணவு ஏற்றுமதி 12 முதல் 14 சதவீதம் ஏற்றுமதியை பதிவுசெய்தது. நீண்டகால வர்த்தக வாய்ப்புகளை உறுதிசெய்ய தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை இந்தியா மேம்படுத்தி வருகிறது.

(iv) இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்க வேண்டுமெனில் அடுத்த 20-25 ஆண்டுகளுக்குத் தேவையான அடித்தள கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். ஏற்றுமதி மற்றும் உற்பத்தி அதிகரிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், சர்வதேச சந்தை அணுகல் ஆகியவை இந்த இலக்கை அடைய உதவும் என்றார்.

8. இலங்கையில் டித்வா புயலால் கடுமையான சேதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, 450 மில்லியன் டாலர் (சுமார் ரூ.4,500 கோடி) செலவில் புனரமைப்பு மற்றும் மறுகட்டுமானப் பணிகளை விரைந்து செயல்படுத்த இந்தியாவும், இலங்கையும் தீர்மானித்தன.

(i) கடந்த ஆண்டு நவம்பரில் டித்வா புயலால் இலங்கையில் 30 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர். அந்தப் புயலால் ஏற்பட்ட மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவால், அந்நாட்டில் 640-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

(ii) அந்நாட்டு மக்களுக்கு உதவ 'ஆபரேஷன் சாகர் பந்து'வை மேற்கொண்ட இந்திய அரசு, அந்நாட்டில் புனரமைப்பு மற்றும் மறுகட்டுமானப் பணிகளுக்கு 450 மில்லியன் டாலர் அளிக்கப்படும் என்று அறிவித்தது. இந்நிலையில், இலங்கைத் தலைநகர் கொழும்பில் அந்நாட்டு தொழிலாளர் துறை அமைச்சரும், நிதித்துறை இணையமைச்சருமான அனில் ஜயந்த ஃபெர்னாண்டோவை அந்நாட்டுக்கான இந்திய தூதர் சந்தோஷ் ஜா சந்தித்துப் பேசினார்.

9. மத்திய அரசின் மித்ரா திட்டத்தின்கீழ் தெலங்கானா மாநிலம், வாரங்கல்லில் ரூ.1,695 கோடியில் கட்டமைக்கப்பட்ட நாட்டின் முதலாவது ஜவுளி பூங்காவை பிரதமர் மோடி திறந்துவைத்தார்.

(i) தமிழகம், தெலங்கானா, கர்நாடகம் உள்பட 7 மாநிலங்களில் ஜவுளி பூங்கா திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில், தெலங்கானாவின் வாரங்கல்லில் 1,327 ஏக்கரில் கட்டமைக்கப்பட்ட ஜவுளி பூங்கா திறக்கப்பட்டுள்ளது.

(ii) இந்திய ஜவுளித் துறை வளர்ச்சிக்கு உத்வேகமளிக்கும் இந்தப் பூங்கா ரூ.6,000 கோடி முதலீடுகளை ஈர்க்கும்; 24,400-க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று மத்திய ஜவுளித் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. இந்தியாவின் அறிவியல் பயணத்தின் பகுப்பாய்வு - தேசிய தொழில்நுட்ப தினம் மற்றும் நாட்டின் முக்கிய தொழில்நுட்ப மைல்கற்களை மையமாகக் கொண்டது.

(i) தேசிய தொழில்நுட்ப தினம் (மே 11): 1999 ஆம் ஆண்டு முதல், போக்ரானில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட அணு ஆயுதச் சோதனைகளைக் கொண்டாடுவதற்கும், பொதுமக்கள் மத்தியில் அறிவியல் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்கும், இந்தியா மே 11-ஐ 'தேசிய தொழில்நுட்ப தினமாக' அனுசரித்து வருகிறது.

(ii) போக்ரான்-II-இன் முக்கியத்துவம் (1998):

- மே 11, 1998 அன்று, ஏ.பி.ஜே. அப்துல் கலாம் மற்றும் டாக்டர் ஆர். சிதம்பரம் ஆகியோரின் தலைமையில், ராஜஸ்தான் பாலைவனத்தில் "ஆபரேஷன் சக்தி" (Operation Shakti) என்ற பெயரில் மூன்று அணு ஆயுதச் சோதனைகளை இந்தியா வெற்றிகரமாக நடத்தியது.
- இந்தச் சாதனை மூலம், அணு ஆயுத வல்லமை பெற்ற நாடுகளின் உயர்மட்டக் குழுவில் இணைந்த உலகின் ஆறாவது நாடாக இந்தியா உருவெடுத்தது.
- அதே நாளில், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 'திரிசூல்' (Trishul) ஏவுகணையும், 'ஹன்சா-3' (Hansa-3)

விமானமும் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டன.

(iii) ரகசியத்தன்மை மற்றும் உத்தி:

- அமெரிக்காவின் CIA உளவு செயற்கைக்கோள்களின் கண்காணிப்பில் சிக்குவதைத் தவிர்க்கும் பொருட்டு, இந்திய விஞ்ஞானிகளும் பொறியாளர்களும் பெரும்பாலும் இரவிலும், அல்லது செயற்கைக்கோள் கண்காணிப்பு குறைவாக இருக்கும் குறிப்பிட்ட நேரங்களிலும் மட்டுமே பணியாற்றினர்.
- இந்தியாவின் அணு ஆயுதத் திட்டத்தை பல ஆண்டுகளாகத் தொடர்ந்து கண்காணித்து வந்தபோதிலும், இந்தியாவின் மிகச்சிறந்த உத்திசார் திட்டமிடலின் காரணமாக, இந்த குறிப்பிட்ட நடவடிக்கையைத் தங்களால் கண்டறிய இயலவில்லை என்று அப்போதைய CIA இயக்குனர் ஜார்ஜ் டெனட் ஒப்புக்கொண்டார்.

(iv) விண்வெளி ஆய்வின் மைல்கற்கள்:

- சந்திரயான்-3 (2023): நிலவின் தென் துருவத்தில் விண்கலத்தைத் தரையிறக்கிய உலகின் முதல் நாடாகவும், நிலவில் வெற்றிகரமாகத் தரையிறங்கிய நான்காவது நாடாகவும் இந்தியா சாதனை படைத்தது.
- மங்கள்யான் (2014): செவ்வாய் கிரகத்தின் சுற்றுப்பாதையைத் தனது முதல் முயற்சியிலேயே அடைந்த உலகின் முதல் நாடாக இந்தியா திகழ்ந்தது; மற்ற உலக விண்வெளி முகமைகளை விட மிகக் குறைந்த செலவிலேயே இச்சாதனையை இந்தியா நிகழ்த்திக் காட்டியது.
- இஸ்ரோவின் சாதனை (2017): ஒரே ராக்கெட் பயணத்தின் மூலம் 104 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தி, இந்தியா உலக சாதனை படைத்தது.
- எதிர்காலத் திட்டங்கள்: 'ககன்யான்' (மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டம்) மற்றும் 'பாரதிய அந்தரிக்ஷ நிலையம்' (இந்திய விண்வெளி நிலையம்) அமைத்தல் போன்ற வரவிருக்கும் திட்டங்கள்.

(v) பாதுகாப்பு மற்றும் ஏவுகணைத் தொழில்நுட்பம்:

- 'அக்னி' மற்றும் 'பிருத்வி' ஆகிய பாலிஸ்டிக் ஏவுகணைகளையும், ரஷ்யாவுடன் இணைந்து உருவாக்கப்பட்ட 'பிரம்மோஸ்' (BrahMos) அதிவேகக் குரூஸ் ஏவுகணையையும் உருவாக்குவதன் மூலம், DRDO (பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம்) பாதுகாப்புத் துறையில் தன்னிறைவை எட்டியுள்ளது.
- உள்நாட்டு உற்பத்தியில் 'தேஜஸ்' (Tejas) போர் விமானம் மற்றும் பல்வேறு கவச வாகனங்கள் ஆகியவை அடங்கும்.

(vi) டிஜிட்டல் மற்றும் தொலைத்தொடர்பு முன்னேற்றம்:

- Reliance Jio மற்றும் Bharti Airtel போன்ற நிறுவனங்களின் முயற்சிகளின் மூலம், உள்நாட்டு 5G தொழில்நுட்பத்தில் இந்தியா தன்னை ஒரு முன்னோடி நாடாக நிலைநிறுத்திக்கொண்டுள்ளது.
- புதுமைப் படைப்புகள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு (Startups) மிகவும் உகந்த சூழலைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா தற்போது திகழ்கிறது.

(vii) எதிர்காலத் தொழில்நுட்ப எல்லைகள்:

- எதிர்கால முன்னேற்றமானது, செயற்கை நுண்ணறிவு (AI), ரோபோட்டியல், உயிரித் தொழில்நுட்பம், குவாண்டம் கணினியியல் மற்றும் தூய ஆற்றல் ஆகிய துறைகளில் தேர்ச்சி பெறுவதையே சார்ந்திருக்கிறது.

நவீன உலகில் தொழில்நுட்பம் இல்லாமல் எந்தவித முன்னேற்றமும் சாத்தியமில்லை; எனவே, நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வகையில் அத்தொழில்நுட்பத்தை முறையாகப் பயன்படுத்துவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்